தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 88/2022 | சாட்சியம் | **:** | **WW1** |
| **Name** | **:** | தினேஷ் | | | |
| **Date** | **:** | **03.12.2024** | | | |
| **Time** | **:** | **11.45 a.m to 12.14 p.m** | | | |

தொ.த.சா.1.திரு.தினேஷ் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனக்கு வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிபாணையுடன் KPMG ஆடிட்டர் ரிப்போர்ட் இணைத்து அனுப்பப்பட்டது என்றால் ஆமாம். கே.பி.எம்.ஜி ரிப்போர்ட் ஆங்கிலத்தில் இருக்கும் காரணத்தினால் தமிழாக்கம் வேண்டும் என கேட்டு வழங்கப்பட்டது என்றால் ஆமாம். நான் உள்துறை விசாரணையில் முழுமையாக கலந்து கொண்டேன் என்றால் ஆமாம். சக தொழிலாளியை அழைத்து வர வாய்ப்பு வழங்கினார்களா என்றால் வழங்கினார்கள் ஆனால் நான் சக தொழிலாளியை அழைத்தபோது அவர்கள் கம்பெனி அறிவிப்பு பலகையில் நான்கு தொழிலாளர்களை தற்காலிக பணிநீக்கம் செய்திருப்பதாகவும் அவர்களுக்கு உதவுவதற்கு போனால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்து ஒட்டப்பட்டு இருப்பதாகவும் சொன்னார்கள் அதனால் சக தொழிலாளியை அழைக்கவில்லை மாறாக வேறு நபர்களை வைத்துக் கொள்ள அனுமதி கேட்டபோது உள்துறை விசாரணை அதிகாரி அதற்கான அனுமதி வழங்கவில்லை அது மட்டுமல்லாமல் நான் தொழிற்சங்க நிர்வாகியாக இருந்த காரணத்தினால்

என்னால் மற்ற தொழிலாளர்களுக்கு பிரச்சனை ஏற்படக்கூடாது என்பதாலும் சக தொழிலாளியை உதவிக்கு அழைக்கவில்லை மேலும் எங்களுக்கு வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையிலும் கூட தொழிலாளர்களை தூண்டும் விதத்தில் நடந்து கொள்ளக்கூடாது என தெரிவிக்கப்பட்டிருந்தது எனவே சக தொழிலாளியை அழைத்துக் கொள்ள எங்களால் இயலவில்லை. நான் சக தொழிலாளியான மகேஷ், இளவரசன், ஹரிஹரன், சதீஷ், ராகுல் மேலும் சிலரை தொடர்பு கொண்டு பேசினேன் அவர்கள் தான் அந்த தகவலை தெரிவித்தார்கள். அறிவிப்பு பலகையில் அது போன்று அறிவிப்பு ஒட்டிய விவரத்தை விசாரணை அதிகாரியிடம் சொல்லவில்லை. சட்ட வல்லுனர்களின் உதவியை நாடலாம் என கேட்டு கடிதம் கொடுத்தேன் அதனை தாக்கலும் செய்தேன் அது எந்த ஆவணம் என்றால் தெரியவில்லை. அதுபோன்ற ஆவணம் எதுவும் நான் கொடுக்கவில்லை என்றாலும் அதனால் தான் அது பற்றி என்னுடைய மனுவிலோ, சாட்சியத்திலோ சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. விசாரணையின் போது நிர்வாக தரப்பு ஆவணங்கள் அனைத்தும் வழங்கப்பட்டன என்றால் ஆமாம். சாட்சிகள் அனைவரையும் குறுக்கு விசாரணை செய்தேன் என்றால் ஆமாம். ஆனால் போதிய கால அவகாசம் வழங்கவில்லை. பிரமாண வாக்குமூலம் சாட்சியம் பற்றி நான்கு ஆறு ஏழு, எட்டு ஆகியவற்றில் சொல்லி உள்ள விபரங்கள் உண்மைக்கு புறம்பானவை என்பதால் தான் அதனை நிரூபிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரி அல்ல. 04.02.2021 அன்று நடைபெற்ற விசாரணைக்கு நான் போகவில்லை என்றால் நினைவில்லை. 12.02.2021 அன்று விசாரணையில் கலந்து கொண்டு நாள் 04.02.2021 அன்று நடந்த விசாரணை ஆவணங்களை வாங்கிக் கொண்டேன் என்றால் ஆமாம். என் முன்னிலையில்

சாட்சி விசாரணை நடைபெற்று நான் விசாரணை செய்தேன் என்றால் ஆமாம். 04.02.2021 அன்று நிர்வாக தரப்பில் 27 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருப்பது என் முன்னிலையில் செய்யப்படவில்லை என அதன் பின்னர் நடந்த விசாரணை சமயத்தில் ஆட்சேபனை தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். நான் ஆட்சேபனை எதுவும் செய்யாத காரணத்தினால் தான் உள்துறை விசாரணை நடவடிக்கையில் அதற்கான பதிவு இல்லை என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக நான் கடிதம் மூலம் தெரிவிக்கவில்லை ஆனால் விசாரணையில் தெரிவித்துள்ளேன். சாட்சிகளின் விசாரணை வீடியோ கான்பிரன்சிங் மூலம் நடந்தது என்றால் ஆமாம். கொரோனா காலகட்டம் என்பதால் அவ்வாறு நடந்தது. அதன் பதிவுகள் எனக்கு வழங்கப்பட்டன என்றால் ஆமாம். நிர்வாக தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரையும் விசாரணை செய்தேன் என்றால் ஆமாம். குற்றச்சாட்டு குறிப்பாணையில் சொல்லி உள்ள சாட்சிகளை விசாரிக்கவில்லை. குற்றச்சாட்டு குறிப்பாணையில் மொத்தம் ஐந்து சப்ளையர்கள் குறிப்பிட்டிருந்தார்கள் ஆனால் அதில் மூவரை மட்டும் தான் விசாரித்தார்கள். அதனால் என்ன இழப்பு ஏற்பட்டது என்பது பற்றி சொல்லவில்லை. உள்துறை விசாரணை போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டு இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டு தான் நடைபெற்று இருக்கிறது என்பதால் முதல் நிலை விசாரணை உத்தரவு நிர்வாகத்திற்கு சாதகமாக பிறப்பிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. உள்துறை விசாரணையில் நான் முழுமையாக கலந்து கொண்டு எந்தவித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் இருந்துவிட்டு தற்சமயம் முன்வைக்கும் குற்றச்சாட்டு ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என்றாலும் சரி அல்ல. உள்துறை விசாரணை என்னுடைய ஒப்புதல் பேரில் தான் முடிக்கப்பட்டது

என்றால் இல்லை. கால அவகாசம் கேட்டோம் வழங்கப்படவில்லை. கால அவகாசம் தராமல் அவர்களே முடித்துக் கொண்டு விட்டார்கள். உள்துறை விசாரணை முறையாக நடைபெறவில்லை என முன் வைக்கும் வாதம் ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரி அல்ல.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2024.12.05 15:30:09 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:03.12.2024